**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.56/2020**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.8** |
| **Name** | **:** | திரு. நாகேந்திரகுமார் |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 6.3.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ உயர்நிலை துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.6.2019 அன்று நான் அரசு வேலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது, ஆரணி நகர வட்ட காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின்படி களம்பூர் காவல்நிலைய குற்ற எண். 320/2019 சம்பந்தமான இறந்துபோன திரு.கண்ணன், வயது 60 ஆண் என்பவரின் பிரேதத்தை தலைமை காவலர்

1508 திரு.சிவக்குமார் என்பவர் பிரேத பரிசோதனைக்காக என்னிடம் சமர்ப்பித்தார்.

அதே நாளில் பிற்பகல் 2 மணி அளவில் நான் பிரேதகூறாய்வு செய்தேன். கூறாய்வின்போது மரண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. கை விரல் நகங்கள் வெளிரி இருந்தன. அவரது உடலில் காணப்பட்ட இறப்பிற்கு முன்பான காயங்கள் பின்வருமாறு.

1) செம்பழுப்பு நிற சீராய்ப்பு காயங்கள்

அ) 1.5x 0.8 செ.மீ அளவில் இடது காரை எலும்பின் மீது காணப்பட்டது.

ஆ) 2.8x0.5 செ.மீ அளவில் வயிற்றின் வலது கீழ் பகுதியில் காணப்பட்டது.

2) கிடைமட்டமாக சாய்ந்த குத்து காயம் 2.3x0.8செ.மீ இருதய அறை ஆழத்துடன் நான்காம் விலா எலும்பிடை பகுதி நெஞ்சு எலும்பின் இடது ஓரத்தில் இருந்து 1.1 செ.மீ இடது புறமாக காணப்பட்டது. அதன் ஓரங்கள் சீரற்றும் கன்றியும் காணப்பட்டது. அதன் தடம் மேல் நோக்கியும் பின்னோக்கியும் வலது புறம் நோக்கியும் இருந்தது.

தொடர்ந்து கூறாய்வு செய்ததில் அதனை சுற்றியிருந்த மென்திசுக்கள் கன்றி காணப்பட்டன. இருதயம் இயல்பான அளவில் அதன் அனைத்து அறைகளிலும் சொற்பமான ரத்தத்துடன் காணப்பட்டது. அதன் வால்வுகள் மற்றும் ரத்த நாளங்கள் இயல்பாக இருந்தன. இருதய பை மற்றும் இருதயத்தின் வலது பெருஅறை ஆகியன துளைக்கப்பட்டு காணப்பட்டன. இருதயத்தின் மீது இருந்த துளைத்த காயத்தின் ஓரங்கள் கன்றியும் மேற்சொன்ன மார்பில் காணப்பட்ட துளைத்த காயத்தின் தடத்தில் காணப்பட்டது. இருதய பையில் சுமார் 150 மில்லி நீர்த்த ரத்தம்

காணப்பட்டது.

விலா எலும்புகள் இயல்பாக இருந்தன. நுரையீரல்கள் இயல்பான வகையிலும் வெளிறியும் காணப்பட்டன. குரல்வளை மற்றும் மூச்சு குழாய் காலியாக இருந்தது. அதன் சளி படலம் வெளிரி இருந்தது. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. இரைப்பையில் சுமார் 650 கிராம் செரிக்காத உணவு பொருட்கள் எவ்வித குறிப்பிடத்தக்க வாடையும் இன்றி காணப்பட்டது. அதன் சளி படலம் வெளிரி இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான அளவில் வெளிரியும் காணப்பட்டன. குடல்களில் மலப்பொருட்கள் காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக இருந்தது. இடுப்பு எலும்பு மற்றும் முதுகெலும்புகள் இயல்பாக இருந்தன. தலை தோல், கபாலம் மற்றும் பியுரா சவ்வு ஆகியன இயல்பாக இருந்தன.

மூளை வீங்கியும் அதன் மேற்பரப்பில் மெல்லிய பரவிய சப்அரக்நாய்டு ரத்த கசிவுகள் காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பரிசோதனை செய்ததில் எவ்வித நச்சுபொருட்களும் கண்டறியப்படவில்லை என அறிக்கை பெறப்பட்டது. இதனால் மேற்படி இறந்த நபர் இருதயத்தில் உண்டான குத்து காயத்தினால் ஏற்பட்ட அதிகப்படியான ரத்த போக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறந்திருக்கிறார் என்று இறுதி கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன்.

நீதிமன்றத்தில் காட்டப்படும் சான்று பொருள் 1-னினால் இரண்டாவது காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு. பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7. உடல் உள்ளுறுப்பு ஆய்வறிக்கையை பார்வையிட்டு நான் இறுதி கருத்துரை வழங்கியுள்ளேன். உடல் உள்ளுறுப்பு ஆய்வறிக்கை அ.சா.ஆ.8.

**என்னுடைய இறுதி கருத்துரை அ.சா.ஆ.9. இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**மூளை வீங்கியதற்கான வெளிப்புற காயங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் இல்லை என்பதால் பார்க்கவில்லை. வெளியில் இருந்து தாக்கப்படுவதால் தான் மூளை வீக்கம் மற்றும் ரத்த கசிவிற்கு காரணம் என்றால் அறுதியிட்டு கூற இயலாது. வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லாமல் மூளை வீக்கம் மற்றும் ரத்த கசிவு ஆகியவை ஏற்பட வாய்ப்பே இல்லை என்பதால் மேற்கண்ட காயம் சம்பந்தமாக நான் கொடுத்த கருத்து சரியல்ல என்றால் சரியல்ல. வெளிப்புற காயங்கள் இல்லாமலேயே மூளை வீக்கம் மற்றும் ரத்த கசிவு ஏற்பட வாய்ப்புண்டு.**

**அறிக்கையில் சொல்லியுள்ள வெளிப்புற காயங்களுக்கும் மூளை வீக்கம் மற்றும் ரத்த கசிவிற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரி தான். இரண்டு பகுதியாக சொல்லப்பட்ட முதல் காயமானது ஒரு நபர் ரயில்வே டிராக்கில் ஓரங்களில் உள்ள கற்களின் மீது தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் 1வது காயத்தில் சொன்ன காயத்தை விட அதிகமாக ஏற்பட வாய்ப்புண்டு.**

**இரண்டு பகுதியாக சொல்லப்பட்ட முதல் காயத்திற்கு ஆயுதத்தை காட்டி என்னிடம் கருத்து பெறவில்லை என்றால் சரி தான். இரண்டாவது காயத்தில் தடம் என்று சொல்லியிருப்பது காயத்தின் போக்கு ஆகும். அதற்கான அளவீடுகள் நான் சொல்லவில்லை என்றால் முப்பரிமாண அளவு என்பதால் சொல்லவில்லை. முப்பரிமாண அளவு என்பதால் தான்**

என்னால் அளவீடு கொடுக்க முடியவில்லை.

இரண்டாவது காயம் குத்து காயம் என்பதால் கத்தி போன்ற கூர்மையான ஆயுதத்தால் தான் ஏற்படும் என்றால் சரி தான். ஆயுதத்தை காட்டி என்னிடம் கருத்து பெறப்பட்டதா என்றால் குச்சியை காட்டி கருத்து பெறப்பட்டது. ஆயுதம் என்னிடம் பிரேத பரிசோதனையின்போது காட்டப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. ஒரு நபர் தள்ளுமுள்ளுவின்போது மாடு கட்ட பயன்படும் கூர்மையான மரக்கொம்பின் மீது விழும்போது ஏற்படவாய்ப்புண்டா என்றால் வாய்ப்புகள் குறைவு.

துவரை செடிகள் நிலத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலையில் கூர்மையான பாகங்கள் பூமியில் இருக்கும்போது அந்தமாதிரி நிலங்களில் ஒரு நபர் கீழேவிழும்போது இரண்டாவது குத்து காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் காயம் ஏற்பட்ட விதம் குறித்து பரிசீலித்தபோது ஏற்பட வாய்ப்பில்லை. மரக்குச்சியால் குத்தப்பட்டதாக சொல்லப்படும் அரசு தரப்பு வழக்கின்படி நான் பிரேதத்தை பரிசோதனை செய்தபோது காயங்களில் மரக்குச்சிகளின் சிறு துகள்கள் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

என்னிடம் ஆயுதத்தை காட்டி கருத்து பெறும்போது ஆயுதத்தில் ரத்த கறை இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருள் 1ல் தற்போது ரத்த கறை உள்ளதா என்றால் ஒரு பக்கத்தில் உள்ளது. அது ரத்த கறையா என்பதை உறுதியாக தற்போது சொல்ல இயலாது.

ரத்த கறைபோன்று உள்ள கொம்பின் பகுதியில் நான் சொன்ன குத்து காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் வாய்ப்புண்டு. சான்று பொருள் 1ன் ரத்த கறை போன்று உள்ள கொம்பு முனை 2 செ.மீ அகலம் இருக்கும்

**என்றால் இருக்கும். இரண்டாவது காயமானது சான்று பொருள் 1னினால் ஏற்பட வாய்ப்பில்லை என்றாலும், காவல்துறையின் வேண்டுகோளுக்கிணங்க நான் தவறுதலான அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.